REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5563

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 27௨ சனி (9—4—55) ★ ★ வெளியீடு: பங்குனி 28௨ ஞாயிறு (10—4—55) [இதழ் 255

சூடான் - சுதந்திர நாடாகும்?

கார்டூம், ஏப். 8—

நேற்று நடைபெற்ற சூடான் பாராளுமன்ற தேசிய ஐக்கியக் கட்சியின் கூட்டத்தில், 'சூடான் ஒரு சுயேச்சை நாடாக இருக்க வேண்டும்' என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது ஆட்சியிலிருந்து வரும் இக்கட்சியினர் முன்னர், எகிப்து—சூடான் இணைப்பைத் தனது கொள்கை—குறிக்கோளாகக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். "தனக்கென சொந்த ஜனாதிபதி, சர்க்கார், பாராளுமன்றம் ஆகிய உறுப்புகளைத் தன்னகத்தே கொண்ட பூரணமான ஒரு சுதந்திரக் குடியரசு நாடாக சூடான் திகழவேண்டும்" என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம். இத்தீர்மானத்தை தேசிய ஐக்கியக் கட்சியின் நிர்வாகக் குழு உறுதிப்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தில் வட நாடு பெற்ற மற்றொரு இலாபம்!

ரூ. 14 கோடி செலவில் கண்ட்லா துறைமுகம்

ரூ. 4½ கோடி மூலதனத்தில் காந்திதாம் நகரம்

ரூ. 50 லட்சத்தில் புகைவண்டிப் பாதை விஸ்தரிப்பு

ரூ. 6½ லட்சத்தில் பூகம்பத்தைத் தாங்கும் புகைவண்டி நிலையம்

கராச்சி இழப்பை ஈடு செய்யும் ஏற்பாடு

அகதிகளின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!

பாவுஜ், ஏப். 8—

காந்திதாம்—பாவுஜ் அகண்ட இருப்புப் பாதையையும், புகைவண்டி நிலயத்தையும் நேற்று புகைவண்டித்துறை மந்திரியான லால்பகதூர் சாஸ்திரி திறந்து வைத்தார். அதே மந்திரி இன்று கண்ட்லா துறைமுகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஸ்டான்வாக் கம்பெனியின் எண்ணெய் வடிகால் வசதியைத் துவக்கியும் வைத்தார்.

இந்தியா - பாகிஸ்தான் என இரு பகுதிகளாக இந்தியத் துணைக் கண்டம் பிரிக்கப்பட்டுவிட்டது அதன் விளைவாகக் கராச்சி துறைமுகம் பாகிஸ்தான் பகுதியில் தங்கி விட்டது.

அதை ஈடுசெய்ய வேண்டும் என்ற பெயரில், முதல் ஐந்தாண்டு திட்டத்தில், வடநாட்டிற்கு மற்றும் ஒரு உயர்ந்த துறைமுக திட்டத்திற்கு வழி செய்யப்பட்டது. அதுதான் கண்ட்லா துறைமுகமாகும்.

குஜராத்தை அடுத்துள்ள கட்ச் பகுதியில் மேற்படி புதிய துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டு இருக்கிறது.

அப்புதிய துறைமுகத்திற்கு மொத்தத்தில் செலவாகும் தொகையென ரூ. 13·83 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கண்ட்லா கடற்கரைப் பகுதியில்தான் உத்தமர் காந்தியார் எலும்பின் சிறு பகுதி, ஆச்சார்ய இருபளானி அவர்களால் கரைக்கப்பட்டது; அதன் காரணமாக அப்பகுதிக்கு 'காந்திதாம்' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

'காந்திதாமை' எதிர்காலத்தில் பெரியதோர் நகரமாக ஆக்க ஏற்பாடு நடந்துவருகிறது. அந்த நகரத்திலும், அதை ஒட்டியுள்ளப் பகுதிகளிலும் ஏறத்தாழ 10 லட்சத்திலிருந்து 12 லட்சம் மக்கள் வரை குடியிருக்கும் வசதி கிடைக்கக்கூடுமாம்.

அதற்காக ரூ. 4½ கோடி மூலதனம் திரட்டப்பட்டு இருக்

(4-ம் பக்கம் பார்க்க)

மருத்துவ மனைகளுக்கு கைத்தறி துணிகள்!

மருத்துவ மனைகளிலுள்ள மணமான நர்சுகளுக்குக் குழந்தை பிறப்பதற்கு முன்பும், பின்பும் விடுமுறை தருவது பற்றியும், அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதில் உள்ள தொல்லைகள் பற்றியும், சென்னை சுகாதார மந்திரி ஷெட்டியுடன் கலந்தாலோசித்த நகர மருத்துவ மனைகளின் தலைவர்கள், இனிமேல் மணமான நர்சுகளை பாதிநேர ஊழியர்களாகவே நியமிக்கவேண்டுமென்று முடிவெடுத்திருக்கின்றனர்.

தற்போதைய கணக்கு விவரப்படி மருத்துவ மனைகளில் வேலை பார்க்கும் நர்சுகளில் 20 சதவிகிதத்தினர் மணமானவர்கள் என்று தெரிகிறது.

பெனிசிலின் மருந்தைத் தாறுமாறாக உபயோகிப்பதைக் கட்டுப்படுத்துவதின் அவசியமும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

"மருத்துவ மனைகளில், காயங்களையும் புண்களையும் கட்டவும், மருத்துவ மனை ஊழியர்களுக்கு 'யூனிபாரம்' ஆக கைத்தறி, கதர் துணிகளையே உபயோகிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மருத்துவ நிலையங்களில் நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும் உணவை மாற்றுவது சம்பந்தமாகவும், கைக்குத்தல், புழுங்கல் அரிசியை உபயோகிப்பது சம்பந்தமாகவும் ஆலோசிக்கப்பட்டது. நோயாளிகளுக்கு கைக்குத்தல் புழுங்கல் அரிசியே உணவுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென மாநாட்டில் ஒருமனதாக ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

'இந்திய சர்க்காரின் கொள்கையை ஒப்புக்கொள்ள இயலாது'

'அடிப்படைத் தீர்மானத்திற்கு எதிராக இந்தியை புகுத்துவதேன்?'

'மக்களின் மனோநிலையை மத்திய ஆட்சியினர் மதிக்க வேண்டும்'

நிதி அமைச்சர் சுப்பிரமணியத்தின் நிர்ணயம்

"அகில இந்திய உத்தியோகங்களுக்காக நடத்தப்படும் பரீட்சைகளை இந்திமொழில் மட்டுந்தான் எழுதவேண்டுமென்ற இந்திய சர்க்காரின் கொள்கையை, சென்னை சர்க்கார் ஒப்புக்கோள்ள இயலாது; இக்கருத்து ஏற்கனவே மத்திய ஆட்சியினருக்கு தெரிவிக்கப்பட்டுவிட்டது; இப்பிரச்சினையில், இந்திய சர்க்காரின் இறுதி முடிவு, இந்தி அல்லாத பிற மொழிகள் பேசும் மக்களின் நிலைமையை எவ்விதத்திலும் பாதிக்காதவாறு இருக்குமென நம்புகிறேன்,"

என்று, நிதி மந்திரி சுப்பிரமணியம், சென்னையின் முன்னைய முடிவை நிர்ணயித்துக் கூறினார்.

"சென்னை பல்கலைக் கழகப் போர்டுக்கு இந்திய சர்க்கார் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள திட்டம், அ. இ. கா. க. நிறைவேற்றியுள்ள தீர்மானத்திற்கு விரோதமாக இருக்கிறது; அப்பரீட்சைகள், பிரதேச மொழிகளிலும், இந்தியிலும் நடத்தப்பட வேண்டுமென அத்தீர்மானத்தில் திட்டமாகக் கூறப்பட்டுள்ளது; இப்பிரச்சினை பற்றி பல்வேறு மாநில சர்க்கார், நிறுவனங்கள் அபிப்பிராயங்களை மத்திய ஆட்சியினர் கோரியுள்ளனர்; அவைகளுடன் கலந்தாலோசித்தபின்னரே, இந்திய சர்க்கார் இது பற்றி முடிவு செய்யும் என்று நம்புகிறேன்," என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

நைல் நதித் தண்ணீர் பங்கீடு

எகிப்து — சூடான் பேச்சு வார்த்தை முறிவு

நைல் நதித் தண்ணீர் பற்றி நடைபெற்ற எகிப்து—சூடான் பேச்சுவார்த்தைகள் யாவும் முறிந்துவிட்டனவாம்.

'இப்பிரச்சினையை சர்வதேச பஞ்சாயத்துக்கு விடுவதுபற்றி சர்க்கார் யோசிக்கும்," என்று சூடான் பாசன அமைச்சர் கூறியிருக்கிறார்.

தென்னாட்டுச் செல்வங்கள் சிதையவில்லை!

தங்கம் - வெள்ளி தேங்கிய பாறைகள் நாமக்கல் பகுதிகளில் குவிந்துள்ளன

ஆராய்ச்சியாளருக்குக் கிடைத்த ஆதாரங்கள்

தீவிர பரிசீலனை செய்யக் கோரிக்கை

"சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல் பகுதியில் தங்கம், வெள்ளி, செம்பு முதலிய கனிப்பொருட்கள் கிடைக்கக் கூடும்,"

என்று, சென்னை பல்கலைக் கழக பூகோள ஆராய்ச்சி நிபுணர் எஸ் இராமநாதன் தெரிவித்திருக்கிறார்.

சேலத்தில் காணப்பெறும் பொட்டாசிக்' பாறைகளைத் தாம் பாகுபாடு செய்து ஆராய்ந்து பார்த்ததில், அவற்றிடையே தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு போன்ற கனிப் பொருட்கள் காணப்பட்டதாகவும், இவற்றை உறுதிப்படுத்துவதற்காக, அந்த இடங்களை நன்றாகப் பரிசீலனை செய்யவேண்டியது அவசியம் ஆகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகவலை, அவர், சென்னை கிண்டியில் நடைபெற்ற பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்கள் கூட்டமொன்றில் வெளியிட்டிருக்கிறார்.

"இந்தியாவிலேயே சேலத்தில் மட்டும்தான் இத்தகைய 'பொட்டாசிக்' பாறைகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது,"

என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். உலகிலேயே மிகவும் சுத்தமான 'மாக்னசைட்' கனிப் பொருள் நாமக்கல் மலைப் பகுதிகளில் தான் கிடைக்கிறதென்பதும், இது, வெளிநாடுகளுக்குப் பெருவாரியான அளவில் ஏற்றுமதி செய்யப்படுவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கவையாகும்.

இந்தியக் குடியரசுத் தலைவருக்கு நோட்டீஸ்

புதுடில்லி, ஏப். 9—

"அரசியல் சட்டத்தின் 143-வது பிரிவுப்படி இந்து சட்டத் தொகுப்பு மசோதாக்கள் யாவும் செல்லுபடியாகுமா என்பது பற்றி தலைமை உயர் நீதிமன்றத்தின் (சுப்ரீம் கோர்ட்) கருத்தைக் கேட்டிருந்திருக்க வேண்டும்,"

என்று குறிப்பிட்டு, இந்து சட்டத் தொகுப்பு எதிர்ப்புக்கான அகில இந்திய குழுத் தலைவரான ராமாவதார் பண்டே இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரருக்கு 'நோட்டீஸ்' ஒன்று அனுப்பியிருக்கிறார்

ஆச்சாரியார் அதிருப்தி!

"நிதி உதவிக் கார்ப்பொரேஷன்கள், திருப்தி அளிக்கும் வகையில் இயங்கவில்லை;

"கடன் தரும் வகைகளில் அவைகள் மிகவும் தயக்கமுடையனவாக இருக்கின்றன."

"பண உதவி அளிக்கும் கார்ப்பொரேஷன்கள் நன்கு இயங்கிவர வேண்டுமென்றால் அவை, ஓரளவுக்குத் தங்கள் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு கடன் தரவேண்டும்; அதே நேரத்தில் கடன் பெறுபவர்களும், அக்கடன் தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்தில் திருப்பித் தந்து விடுகின்ற உயர்ந்த ஒழுக்கம் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்."

இவ்வாறு, மத்திய வர்த்தக அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், இராஜஸ்தான் நிதிக் கார்ப்பொரேஷனை ஆரம்பித்து வைத்துப் பேசகையில் கூறினார்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 9—4—'55 சனி

'புண்ணிய பாக்கியம்!'

"யாழையும் குழலையும் குழையச் செய்யும் மழலை மொழியும் குழவி-கிள்ளை மொழிந்து சள்ளைப்படும் உள்ளத்தை மகிழ்விக்கும் சின்னஞ்சிறு கிளி—பிள்ளைக் கனியமுது—பேசும் பொற்சித்திரம்—நமக்கொன்று இல்லையே!"

"ஆடி ஓடி அகமகிழச் செய்யும் அந்தப் பொன் விளக்கு ஒன்று என் குல விளக்கேற்ற எனக்கில்லையே! 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு,' என்பார்களே! 'என் குஞ்சு' என நான் கொஞ்சி நெஞ்சு மகிழ 'அஞ்சுகமே! அருகில் வாராய்!' என்று அழைத்து, அதன் பிஞ்சுக் கரத்தையும், பஞ்சுக் கன்னத்யைும் முத்தமிட்டு சித்தம் குளிர பிள்ளையொன்று இல்லையே, எனக்கு!"

இவ்வாறு ஏங்குபவர் உண்டு, நாட்டில், பலர்!

"பிள்ளையில்லையே, ஐயோ! புத்திர பாக்கியம் இல்லாத நான், 'புத்' எனும் நரகத்தில் பொத்தென விழுவேன் என்று கூறுகிறார்களே; என் செய்வேன்?" — இவ்வாறு அஞ்சுபவரும் உண்டு, நாட்டில் ஏராளமாக!

"புத்திர பாக்கியம், புண்ணியஞ் செய்தோருக்குத்தானப்பா கிடைக்கும்; போன ஜென்மத்தில் நீ என்ன பாபஞ் செய்தாயோ — இந்தப் பிறவியில் இப்படி நீ ஏங்கித் தவிக்கும்படியாக மகவுப் பேறின்றி மனம் சோர்ந்து கிடக்கிறாய்? கவலைப்படாதே! கண்ணீரைத் துடைத்துக் கொள்! போன ஜென்மத்தில்தான் புண்ணியம் செய்யவில்லை நீ! இந்த ஜென்மத்திலாவது செய்து, பாபங்களுக்குப் பரிகாரம் தேடு; பிராயச்சித்தம் செய்!" — உத்தரவிடுகிறது வைதீகம்; பழைமை; மடமை!

"என்ன செய்யவேண்டும் சுவாமி; சொல்லுங்கள் செய்கிறேன்; நான் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் தேட என்ன செய்யவேண்டும்?"

"என்ன செய்ய வேண்டுமா? தவறாது 'அவன்' நாமத்தை தியானம் செய்! தரிசனம் செய்! அள்ளிக்கொடு அந்தணருக்கு! அரவத்திற்கு ஆவின்பால் வார்த்துவா! உன் மனைவியை அரச மரத்தைச் சுற்றிவரச் செய்! இருவருமாக 'சோமவார' விரதமிருங்கள்! 'நாகப்பிரஷ்டம்' செய்யுங்கள்! தங்கத்தாலோ, வெள்ளியாலோ—உன் சக்திக்கேற்ற அளவு 'நாகம்' ஒன்று செய்து, வேதம் ஓதும் அந்தணருக்குக் கொடு! இராமேசுவரம் சென்று, கடலில் மூழ்கி, உங்கள் 'கருமங்களை'க் கழுவி விட்டு வாருங்கள்-பிறகு பார்-கருத்தரிப்பாள், உன் மனைவி; கவலை தீர்ப்பாள்; களிப்புத் தருவாள்," கூறுகின்றன புராண இதிகாசங்கள்!

இத்தனையும் செய்யும் எண்ணற்றவர்கள், நாட்டிலே இன்றுமுண்டு. செய்த பூசையும், சுற்றிய அரசமரமும், பால் குடித்த பாம்பும், பார்ப்பனருக்குப் பரிசு தந்த வெள்ளி நாகமும், பெருந் தொகை செலவிட்டுச் சென்றுவந்த தீர்த்த யாத்திரையும், 'கலி' தீர்த்ததா? கவலை அகற்றியதா? பிள்ளைப் பேறு பெற உதவினவா?—எண்ணிப் பார்க்கமாட்டார்கள், இத்தனை ஆசார அனுஷ்டானங்களையும் மேற்கொண்ட 'பக்திமான்'கள்!

"பாபத்தை அளவு மீறி செய்துவிட்டோம் போலும்; அதுதான், இராமேஸ்வரம் கடலுக்குக்கூட, நமது 'பாபக் கறை'யைக் கரைக்க இயலவில்லைபோலும்," என்றெண்ணி இருந்துவிடுவர்!

'பிள்ளைப் பேறு இல்லை' என்ற குறை, பெருங் குறைதான்.

'அறிவுமிகுந்தோன்' என்று அவனியோர் சொல்லக் கேட்டால், 'அவனைப் பெற்ற பொழுதிலும், இன்பம் மிகப் பெறக் கூடும்' என்று தாய்மாரும், 'இவனைப் பெற்றெடுக்க இவன் தந்தை என்ன நன்மை செய்தாரோ' என்று ஊரார் புகழக் கேட்கத் துடிக்கும் தந்தையரும், 'குழந்தை இல்லையே,' என்று குறைப்பட்டுக் கொள்வது இயல்புதான்; ஆனால், இயற்கையாக இல்லாமற் போய்விட்ட ஒன்றிற்காக, எதை எதையோ எண்ணிக் கொண்டு, சொந்த நலன் கருதி சில சுயநலமிகள் விடும் 'சரடு'களை நம்பி, பகுத்தறிவை இழந்து, 'ஆகும் நெறி' ஆக்கித் தந்திருக்கும் ஆயிரமாயிரம் விஞ்ஞான வளர்ச்சியையும் காண மறுத்து, 'ஆகாத நெறி'யில் சென்று, காசைக் கரியாக்குகிறார்களே, மக்கள்—என்று நாம் கவலைப்படுபவர்களாக இருக்கிறோம்.

இந்த நிலை மாற, மக்களை பகுத்தறிவுப் பாதையில் நடக்கச் செய்ய இந்நாட்டில் நாம் பாடுபட்டு வருகிறோம்.

ஆனால்......

பிள்ளை இல்லை அவளுக்கு—குறைப்பட்டாள்; மனம் நொந்தாள்; மணவாளன் ஏக்கம் கண்டு உளம் சோர்ந்தாள்.

அந்த உள்ளச் சோர்வு, அறியாமையின் பக்கம் அவளை இழுத்துச் சென்றது; கணவனும் உடன் சென்றான்; அவர்கள் கண்ணிலே 'புண்ணிய பாக்கியம்'—ஒரு தெலுங்குப் புராணச் சுவடி—கிடைத்தது; அந்தப் புராணம் கூறிய புளுகை, புத்திர பாக்கியமின்றித் தவித்த அந்தக் கணவனும், மனைவியும் நம்பினார்கள்; விளைவு—தேவம்மா—அதுதான் அவள் பெயர்—அந்த 30 வயது நிரம்பிய பெண்மணி, தன்னையே பலியாக்கிக் கொண்டாள்—'பிள்ளையில்லாக் குறை நீங்கும்,' என்ற குறைமதியால்!

ஐதராபாத்தைச் சேர்ந்த அந்த தேவம்மாவின் தலை துண்டிக்கப்பட்ட முண்டம், பூனை அருகே காடு ஒன்றில், சிவலிங்கத்தின் அருகே காணப்பட்டதாம்—சில வாரங்களுக்கு முன்பு! அந்த முண்டத்தின் அருகே ஏழு தீஞ்சுவை மாங்கனிகளும், எரிந்த சூடமும், புகைந்த வத்தியும், மற்றும் பூசைப் பொருள்களும் சிதறிக் கிடந்தனவாம்.

'கொலையானல், யார் கொன்றார்கள்? ஏன் கொன்றார்கள்?'-கேட்டுக் கொண்டனர் போலீசார், தங்களைத் தாங்களே! விடையும் கிடைத்தது; ஆனால், விபரீதமான விடை!

தேவம்மா—குழந்தைப் பேறில்லாதவள்; குறைபட்டாள், கணவனுடன்; குழந்தை பெறும் மார்க்கத்தைக் கூறியது 'புண்ணிய பாக்கியம்' என்ற புராண ஏடு! ஓடினர் பூனைவுக்கு; காடு ஒன்றில், சிவலிங்கத்திற்கு, சில நாட்கள் வரை பூசைகள்நடத்தினர்; பிறிதோர் நாள் நிறைந்த மனதுடன் மனைவி குனிந்து கொடுக்க கணவன் கோடரி கொண்டு அவள் தலையைத் துண்டித்தான்; இவ்வளவும், 'பிள்ளை பிறக்கும்,' என்ற நம்பிக்கையுடன்தான் நடைபெற்றிருக்க வேண்டும் — இவ்வாறு யூகிக்கின்றனர் போலீசார்.

"பேதமை அவன் செயல்; பிள்ளை பிறக்குமென அவர்கள் எப்படி நம்ப முடியும்—பிள்ளையைப் பெறவேண்டிய அவளே செத்து மடியும்போது" என்பீர்கள்; உண்மைதான்; ஆனால் அவர்களுக்கு அந்த வழியைக் கூறியது, 'புண்ணிய பாக்கியம்' என்ற புராண ஏடாயிற்றே!

ராணி ஒருத்தி; பேணி வளர்க்க பிள்ளையில்லையாம் அவளுக்கு; பெருமானை வேண்டினளாம்; பெம்மானும் 'பிள்ளையா வேண்டும்? உன் உயிரைத் தந்தால் தருகிறேன்,' என்றாராம்; 'சம்மதம்' என்றாளாம் ராணி; 'சரி; லிங்கம் ஒன்றை மாமரத்தடியில் பிரதிஷ்டை செய்; ஏழு மாங்கனிகளைப் பறித்து அருகே வைத்து பூஜை செய்; உடலிலிருந்து உன் உயிர் பிரியட்டும்; பிள்ளை பிறக்கும்—அந்த ஏழு மாங்கனிகளும் ஏழு மழலைகளாக உருவெடுக்கும்," என்றாராம்.

இந்தப் புளுகை, 'புண்ணிய பாக்கியம்,' என்ற அந்த புராண ஏடு!—பெண் ஒருத்தி லிங்கம் ஒன்றின் முன்குனிந்து நிற்பதைப் போலவும், ஆண் ஒருவன் அவள் தலையைத் துண்டிக்க ஓங்கிய கோடரியுடன் நிற்பதைப் போலவும் வரையப்பெற்ற படம் ஒன்றுடன் தாங்கி நிற்கிறதாம்.

தேவம்மாவின் முண்டத்தின் அருகே, 'புண்ணிய பாக்கியம்' என்ற அந்தப் புராண ஏடு கிடந்ததாம்!

அதைப் படித்தறிந்த போலீசார், தேவம்மாவின் 'கொலை'க்கான காரணத்தை யூகித்துள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன.

மேலும், மனைவியை வெட்டி விழ்த்தியதும், லிங்கத்தின்முன் வைத்துப் பூஜை செய்த மாங்கனிகள், குழந்தைகளாக உருவெடுக்கும் என்று எண்ணிய அந்த மடமைப் பிறவி — கணவன்-ஏமாற்றமடைந்து போனதாலேயே இதுவரை காணப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

பிள்ளை ஏன் பிறக்கவில்லை? பிள்ளைகள் அதிகமாகப் பிறப்பதைத் தடுப்பதெப்படி?—விஞ்ஞானம் கண்டறிந்து கூறியிருக்கிறது.

'பிள்ளை ஏன் பிறக்கவில்லை,' என்று தெரிந்து கொள்ள முயன்றிருக்க முடியாது—'புண்ணிய பாக்கியம்' படித்த அந்த 'கொலைக்கார'னல்; வேதனைநிரம்பிய விபரீதம்புரிந்த அந்த அவிவிவேகியால்! பிள்ளைகள் பெற வழி கற்றுத் தரும் 'புண்ணிய பாக்கியங்'கள் என்று இந்த நாட்டு மக்களின் கண்ணிலிருந்து மறைக்கப்பட்டு, அவர்கள் அறிவொளி பெறுகிறார்களோ, அன்றல்லவா, மக்கள், 'மக்கள்' என்ற பெயருக்குரிய பொருளுடன் அழைக்கப்பட முடியும்?

பிள்ளைப் பேறு பெற, அரச மரம் சுற்றுவதும், அரவத்திற்கு பால் வார்ப்பதும், அந்தணருக்கு அள்ளிக்கொடுப்பதும், கடல் நீரில் 'கட்டை'யைக் கழுவுவதும், 'புண்ணிய பாக்கியங்'களை நாடுவதும், நாட்டு மக்களின் உள்ளத்தைவிட்டு அகற்றப்பட்டால் அல்லவா, நாடு நலம் பெறும்?

'தேவம்மா'க்கள் நாட்டில் நடைபெற, 'புண்ணிய பாக்கியங்'கள் வழிகோலிக் கொண்டிருப்பதை, நாடாளும் நல்லவர்கள் உணர வேண்டுமே? அப்பொழுதல்லவா, அவர்கள் திறந்து வைக்கும் மருத்துவமனைகள், பிள்ளைப்பேறு நிலையங்கள், குடும்பக் கட்டுப்பாடு இல்லங்கள், தேக நல ஆலோசனை மன்றங்கள் பயனுள்ளவையாக மக்களால் பயன்படுத்தப்படுபனவாக இருக்க முடியும்?

திருவாங்கூர்-கொச்சி தமிழ் மக்களின் உரிமைகள்!

தமிழ்ப் பகுதிகள் பிரிந்துவிடும் என்ற அச்சத்தால் மறுக்கப்படுகின்றன

சட்டசபையில் நூர்முகமது தகவல்

திரு-கொச்சியிலுள்ள தமிழ்ப் பகுதிகள் பிரிந்து சென்றுவிடும் என்ற கருத்தில், அங்குள்ளோருக்கு உத்தியோகங்கள் தரவும், அந்தப் பிரதேச மக்களின் தேவைகளைக் கவனிக்கவும் அரசாங்கம் தயங்குவதாக என். ஏ நூர்முகமது சட்டசபையில் தெரிவித்தார்.

மேலும், கோதையாறு விரிவுபடுத்தும் திட்டத்தை அமுலாக்க வேண்டும் என்றும் அவர் ஐந்தாண்டுத் திட்ட விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

கூட்டுப் பண்ணைகளுக்கு 30,000 நகரவாசிகள்

விவசாய அபிவிருத்திக்காக கிராமங்களுக்கு அனுப்பப்படுவர்

நகரங்களில் வாழும் 30,000 ரஷ்யர், அரசாங்க உத்திரவின்படி இன்னும் 3 மாதங்களில், பிற்போக்காயிருக்கும் கூட்டுப் பண்ணைகளுக்கு அனுப்பப்படுவார்களாம்.

விவசாய உற்பத்தி நாட்டில் மிகவும் மோசமாகிவிட்டது என்பதற்காகவே இந்த முடிவு மாஸ்கோவில் ஏற்பட்டிருக்கிறதெனக் கூறப்படுகிறது.

பிற்போக்கான கூட்டுப் பண்ணைகளின் தலைவர்கள் மாற்றப்பட்டு, அவர்கள் இடங்களில் இந்த 30,000 நகர வாசிகளும் அமர்த்தப்படுவர். சோவியத் ரஷ்யா முழுவதிலும் 94,000 கூட்டுப் பண்ணைத் தலைவர்களே இருக்கிறார்கள்; எனவே, ஏறக்குறைய மூன்றிலொரு பகுதியினர் பதவியிழப்பர்.

உள்நாட்டு முறை மருத்துவம்

4190 பேர் சிகிச்சை பெற்றனர்

சென்னை உள்நாட்டு முறை மருத்துவமனையில் புதிய விடுதிப் பகுதி திறக்கப்பட்டன. 4190 நோயாளிகள் சிகிச்சையளிக்கப்பட்டனர், என்ற தகவலை சென்னை மேல் சபையில் சுகாதர மந்திரி ஏ. பி ஷெட்டி கூறியிருக்கிறார்.

அலோபதி முறை மருத்துவமும் அந்த மருத்துவமனையில் மேற்கொள்ளப்படுவதாகவும் ஒரு உப கேள்விக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

4,000 கோடி டாலர் முதலீடு!

ஆக்கத் துறைகளில் அணுசக்தியைப் புகுத்த முயற்சி

ஆக்கத் துறைகளில் அணுசக்தியைப் பயன்படுத்தும் தொழில்களுக்கு அமெரிக்கா அடுத்த 20 ஆண்டுகளில் 4,000 கோடி டாலர் முதலீடு செய்யும்.

இந்த 4,000 கோடி டாலரில் ஒரு பகுதி மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையான அணு உலைகளுக்காகவும், மறுபகுதி கப்பல், விமானம், ரயில் முதலியவைகளை இயக்குவதற்குப் பயன்படும் அணு உலைகளுக்காகவும் செலவிடப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

நீர்வளிக் குண்டின் விளைவா?

சைபீரியாவில் ரஷ்யா நீர்வளிக் குண்டு வெடிக்கச் செய்து பரிசோதனை நடத்தியதின் விளைவுதான் சென்ற செப்டம்பர் திங்களில் ஜப்பானில் ரேடியக் கதிரியக்க மழை பெய்த காரணம் என்று இங்குள்ள விஞ்ஞானிகள் சிலர் கருதுகின்றனராம்.

இந்தியா - அமெரிக்கா நேச உறவை வளர்க்க

அமெரிக்க அமைச்சரின் ஆலோசனை!

"ஆசியாக் கண்டத்திலேயே கம்யூனிஸ்டல்லாத மிகப் பெரிய நாடான இந்தியாவுக்கு உலகில் மிகுந்த செல்வாக்கு இருந்துவருகிறது. ஆகவே, 'கோஷ்டி சேருவதில்லை' என்ற இந்தியாவின் கொள்கைக்கும் நமது கூட்டுப் பாதுகாப்புக் கொள்கைக்கும் இடையே உள்ள முரண்பாடற்ற அம்சங்களில் ஒற்றுமை காண முயற்சிப்பதோடு, இந்தியாவின் நேச உறவை மேலும் மேலும் வளர்த்துக்கொள்வதற்கான முயற்சிகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்."

இவ்வாறு அமெரிக்க சட்டசபை மானியக் குழுவில் பேசுகையில், முன்னாள் இந்தியாவில் அமெரிக்கத் தூதுவராகவும், இப்போது அமெரிக்கத் துணை இராஜாங்க மந்திரியாகவும் இருந்துவரும் ஆலன் தமது கருத்தை வெளியிட்டிருக்கிறாராம்.

"பல்வேறு தேசியப் பிரச்சினைகள் பற்றிய கண்ணோட்டத்தில் இந்தியா, அமெரிக்கா ஆகியவற்றிடையே வேற்றுமைகள் காணப்படுவதால், இந்தியாவிலிருக்கும் அமெரிக்கத் தூதுவராலயங்களும், கிளை நிறுவனங்களும் போதிய சிப்பந்திகளுடனும், வசதிகளுடனும் திரம்படச் செயலாற்ற வேண்டும்" என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

பக்ரா நங்கல் திட்டத்தில் 10 லட்சம் ரூபாய் லஞ்சம்

இரு எஞ்சினீயர்கள் உட்பட பல அதிகாரிகள் கைது

"இதுவரை ரூ. 100 கோடி செலவிடப்பட்டுள்ள பக்ரா—நங்கல் திட்டத்தில் சுமார் 10 இலட்சம் ரூபாய் வரை லஞ்சம் கொடுக்கப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி இரண்டு எஞ்சினியர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

"லஞ்சக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கடுந் தண்டனை தர எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. லஞ்சக் குற்றம் பற்றி கிடைத்திருக்கிற எல்லா விபரங்களையும், நான் மக்கள் சபைக்குத் தெரிவிக்கிறேன்,"

என்று, திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தா கூறியிருக்கிறார்.

★

'கடுந் தண்டனை அளிப்போம்!'

புது டில்லி. ஏப். 6—

"லஞ்சக் குற்றஞ் சாட்டப்படும் அதிகாரிகள் கடும் விசாரணைக்காளாக்கப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டால்,தயை தாட்சண்யமின்றி கடுமையான தண்டனைக்குள்ளாவர்,"

என்ற உறுதி மொழியை, மக்கள் சபையில், நீர்ப்பாசன இலாகா மந்திரி குல்ஜாரிலால் நந்தா தந்திருக்கிறார்.

ஆரம்பக் கல்வி வளர்ச்சி

"ஆரம்பக் கல்வி சம்பந்தப்பட்ட வரையில், அதனை விரிவுபடுத்தி, பலப்படுத்த வேண்டியது அவசியமாகிறது ; அதே நேரத்தில் இடைநிலைப் பள்ளிக் கல்வித் துறையிலும் ஓரளவு விரிவு படுத்தும் திட்டங்கள் மேற்கொள்ளப்படலாம் ;

"1961-ம் ஆண்டிற்குள் இடைநிலைக்கல்வியில் அதிகப்படியாக சுமார் 30 லட்சம் பேர் படிப்பார்கள் ; ஆரம்பக் கல்வியில், அதே நேரத்தில் சுமார் 4½ கோடிப் பேர் அதிகப்படியாகக் கல்வி பெறுவர்."

இவ்வாறு, புதுடில்லியில், இந்திய சர்க்கார் கல்வி இலாகா செயலாளரான பேராசிரியர் ஹுமாயூன் கபீர் கூறியிருக்கிறார்.

மேலும், 1961-ம் ஆண்டிற்குள் புதிதாக 1,25,000 ஆரம்பப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், எல்லா ஆசிரியர்களுக்கும் புதிய விகிதத்தில் ஊதியம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கடமை மிக்க காவற்காரர்!

சித்தூர் (இராஜஸ்தான்) ஏப். 6—

இங்குள்ள இரயில்வே 'லெவல் கிராசிங்' ஒன்றில் மூடப்பட்டிருந்த கதவை,பிரதமர் நேருவின் கார் வந்த பிறகும் திறந்துவிட காவற்காரர் மறுத்திருக்கிறார்.

இரயில் வருகிறது என்று தெரிந்த அக்காவற்காரர், பிற வண்டிகளின் போக்குவரத்தை நிறுத்த இரயில்வே கேட்டை மூடியிருக்கிறார் ; சிறிது நேரத்திற்குள்ளாகவே அந்தப் பாதையில் பிரதமர் நேருவின் கார் வந்திருக்கிறது ; நேருவே வந்திருக்கிறார் என்று அக்காவற்காரன் அறிந்திருந்தும் கூட, கதவைத் திறந்து காருக்கு வழிவிட அனுமதிக்க மறுத்துவிட்டாராம்!

இதனால் 10 நிமிட நேரம் வரையிலும் காத்துக்கொண்டிருந்த பிரதமர் நேரு, கீழே இறங்கி 'நடந்தே செல்வது' என்று தீர்மானித்து, அவ்வாறே தமது மாளிகைக்கு நடந்தே சென்றாராம்.

அவர் அவ்வாறு செல்லுகையில், அக்காவற்காரன் முதுகைத் தட்டிக் கொடுத்து அவனது கடமை உணர்ச்சியை வெகுவாகப் பாராட்டினாராம்!

தாக்கமாட்டோம் ; ஆனால் தாக்கப்பட்டால்...

சித்தூர்கட், ஏப். 7—

"எந்த ஒரு நாட்டிடமும் இந்தியாவிற்கு விரோத மனப்பான்மை கிடையாது ; நாம் எவருடனும் சண்டைக்குப் போகமாட்டோம் ; ஆனால், நாம் எப்போதாவது தாக்கப்பட்டால், அதனை நமது முழு பலத்துடனும் எதிர்த்து முறியடிப்போம்."

இவ்வாறு, பிரதமர் பண்டித நேரு இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

திபேத்-நேபாளம் தகராறு

நேபாள அரசாங்கம், திபேத்திற்கு அரிசி ஏற்றுமதி செய்யப்படுவதை தடை செய்துவிட்டதை ஒட்டி, திபேத் அரசாங்கமும் இந்துப்பு ஏற்றுமதியைத் தடை செய்திருப்பதுடன், நேபாள எல்லையோரத்தில் உள்ள திபேத் நகரமான கெராங்கில் உள்ள சோதனை நிலயத்தை மேலும் பலப்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

பண்டைக் காலந்தொட்டு நடைபெற்றுவரும் திபேத்திடமிருந்து இந்துப்பு இறக்குமதியை நேபாளம் செய்து கொள்வதும், நேபாளத்திலிருந்து, அரிசி இறக்குமதியை திபேத் செய்துகொள்வதுமான பண்டமாற்று இப்போது நிலை நின்றுவிட்டதுடன், இரு அரசாங்கங்களும் கடுமையான வாசகங்களைப் பரிமாறிக் கொள்வதாயும் கூறப்படுகிறது தங்கள் தங்கள் நாட்டு மக்களை கொடுமைப் படுத்துவதாக இரு சாராரும் குற்றஞ் சுமத்துகின்றனர்.

ஆசியாவுக்கு உதவ அமெரிக்கத் திட்டம்

335 கோடி டாலர் ஒதுக்கப்படும்!

335 கோடி டாலர் செலவில் உலக நாடுகள் முழுமைக்குமாக் புது உதவித் திட்டம் ஒன்றை அமெரிக்க ஜனாதிபதி ஐசன் ஹோவர் தீட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இத்திட்டத்தில், ஆசிய நாடுகளுக்கு பீரங்கிகளும், வெண்ணெயும் வழங்குவதற்கு 60 சதவிகிதம் ஒதுக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஜப்பானிலிருந்து ஆப்கானிஸ்தான் வரையிலுமுள்ள 'ஆசியப் பிறை வடிவ'ப் பகுதி நாடுகளுக்கு நேரிடையான தொழில் நுட்ப, பொருளாதார உதவி அளிக்கும் வகையில் இத்தொகையில் 91½ கோடி டாலர் ஒதுக்கப்படுமாம்.

இத்திட்டப்படி, ஆசிய நேச நாடுகளுக்கு 122,55,00,000 டாலர் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் மொத்தமாக இராணுவ உதவியாகத் தரப்பட்டுள்ளது.

இந்தத் தொகை, சென்ற ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்ததைவிட 48 சத விகிதம் அதிகமாகும்.

இத்தொகை போக எஞ்சிய தொகைதான் மற்றைய ஐரோப்பிய நாடுகள், தென்அமெரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவற்றிற்குத் தரப்படுமாம்.

★★★★★★ ★★★★★★★★★★★★

பொதுச் செயலாளர் அண்ணாதுரை

கருகம்பத்தூர் பஞ்சாயத்து சபை வரவேற்பு

20—3—55ல் நடைபெற்ற கருகம்பத்தூர் கிராம பஞ்சாயத்துக் குழுக் கூட்டத்தில் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கு வரவேற்பு கொடுப்பதென தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

★

உருவப் படத் திறப்பு

ஓமலூர் பஞ்சாயத்துசபை முடிவு

ஓமலூர் பஞ்சாயத்துக் குழுவின் கூட்டம், சென்ற 6-ந் தேதியன்று, பஞ்சாயத்துக் குழுத் தலைவர் தோழர் ஆர். குப்புசாமி தலைமையில் நடைபெற்ற போது, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களின் உருவப் படத்தை தோழர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடிகர் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைக்கொண்டு திறந்துவைப்பதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

தில்லை திராவிட இளைஞர் முன்னேற்ற படிப்பகம்

29—3—55 இரவு 10 மணிக்கு படிப்பக உறுப்பினர் கூட்டம், தோழர் டி. வி. வீரத்தம்பி தலைமையில் நடைபெற்றபோது 30—1—'55-ல் நடைபெற்ற பொங்கல் விழாப் பொதுக் கூட்டத்தின் வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட பின், படிப்பக நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாணவர் இலக்கிய மன்றம்

முத்துப்பேட்டை கழக உயர்நிலைப்பள்ளியின் மேற்படி மன்றத்தின் ஆண்டு விழா 30—3—55 மாலை 3½ மணிக்கு திரு எஸ். பஞ்சநாதம் தலைமையில் நடைபெற்றது. திரு. எம். இராசமாணிக்கம் 'தாய்மொழியும் மாணவரும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். பின்னர், பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது.

சொற்பயிற்சிக் கூட்டம்

3—4—55 இரவு 8 மணிக்கு. செங்காட்டுப்பட்டி, தி. மு. கழகச் சார்பில் சொற்பயிற்சிக் கூட்டம் வடக்கு பெருமாள் கோவில் மண்டபத்தில், தோழர் நா. அரங்கசாமி தலைமையில் நடைபெற்றது. 'திராவிட நாடு பிரிவினை' குறித்து தோழர்கள் பெ. அரங்கராசன், வி. அருணசலம், மதுசூதனன், அரு. ஆதிமூலம் ஆகியோர் பேசினர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. கழக பொதுக்குழு

★

தி. மு. கழகப் பொதுக் குழு, சென்னையில் ஏப்ரல் 24-ல் நடைபெற இருக்கிறது.

பொதுச் செயலாளர் தேர்தலும், மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைத்தலும் அன்று முக்கிய நிகழ்ச்சிகள்.

இடம், அடுத்த அறிக்கையில்.

—தி. மு. கழக தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★ ★★★★★ ★★★★★★★★

'தீச்சுடர்' வளர்ச்சி நிதி சிறப்புக் கூட்டம்

நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு சொற்பொழிவு

3—4—55 காலை 10 மணிக்கு சேலம் பிரபாத் டாக்கீசில் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் மேற்படி சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் இ. ஆர். கிருஷ்ணன் கூட்டத்தின் நோக்கம் பற்றி பேசியபின், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் 'ஆபிரகாம் லிங்கன்'வாழ்க்கையை பற்றி விரிவுரையாற்றினர் பின்னர், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "ஆகும் நெறி எது, ஆகா நெறி எது" என்ற தலைப்பில் விளக்கவுரையாற்றினர்.

பின்னர், நகரக் கிளை செயலாளர் இ ஆர் கிருஷ்ணன், தோழர் சி. பி. சிற்றரசு அவர்களிடம் கட்டண மூலமும், தோழர்களின் நன்கொடை மூலமும் வசூலான தொகையில் கூட்ட செலவு போக மீதி தொகை ரூ. 152—3—6 'தீச்சுடர்' வளர்ச்சி நிதிக்கு சேலம் நகர மக்கள் சார்பில் அளித்து, யாவருக்கும் நன்றி தெரிவித்தார்.

தேனீ வளர்ப்புக்கு ரூ. 39,000 மானியம்

சென்னை, ஏப். 6—

சென்ற ஆண்டில், சென்னை மாநிலத்தில் தேனீ வளர்ப்புக்கென, அகில இந்திய கதர், கிராமத் தொழில் அபிவிருத்திக் குழு ரூ. 39,000 மானியத் தொகை வழங்கியிருக்கிறதாம்.

வெண்ணெய்—நெய் வியாபாரிகள் சங்கம்

திருநெல்வேலி, ஏப். 1—

இன்று நெல்லை மாவட்ட நெய் வியாபாரிகள் சங்க ஆரம்பக் கூட்டம் தோழர் வி. பி. காளியப்பன் தலைமையில் நடைபெற்றபோது, சங்க நிர்வாகிகளாக வி. பி. காளியப்பன் தலைவராகவும், கா. சந்திகாவலப் பெருமாள் துணைத்தலைவராகவும், எஸ். பி. அழகர்சாமி செயலாளராகவும் ஆர். காசிராமசாமி துணைச் செயலாளராகவும், அ. முத்துசாமி பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் ப. ஆ பழனி, எஸ். கே. பூலோகம்' ஆர்.நடராஜன், பி. ஆர். சுப்பையா, ராமையா, நா. பொ. வீரப்பா ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நீத்தார் நினைவு நாள்

2—4—55 'நம் நாடு' இதழ் 3-ம் பக்கம் 5-ம் கலம் இறுதியில் வெளிவந்துள்ள செய்தியை கீழ்க் கண்டவாறு திருத்தி வாசித்துக் கொள்க :—

10—3—55ல், சென்னை இராயப்பேட்டை தி மு கழகத் தோழர் கோ. இளவரசு அவர்களின் மாமனார் தோழர் மாணிக்கம் இயற்கை எய்தியமை குறித்து 27—3—55 பகல் 12 மணியளவில் சென்னை திருவட்டீசுவரன் பேட்டை எண். 127 இல்லத்தில், தோழர் மு. புரட்சிமணி தலைமையில் சீர்திருத்த முறையில் நீத்தார் நினைவு நாள் கூட்டம் நடைபெற்றது.

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் பொதுக் குழுக் கூட்டம்

3-4-55 காலை 10-மணிக்கு கோவை தியாகராயர் படிப்பகத்தில், அமைப்பாளர் தோழர் இரா. சுந்தரம் தலைமையிலும்,தோழர்கள் என். வி. நடராசன், எஸ்.ஏ.இராசமாணிக்கம்,கஸ்தூரி ஆகியோர்முன்னிலையிலும் நடைபெற்றபோது, 'திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் கழகம்' என்ற பெயருடைய அமைப்பை நிறுவி நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. இறுதியில் தொழிற்சங்கத்திற்கான கொள்கைகள்—சட்ட திட்டங்கள் ஆகியவற்றை வகுத்தபின்னர், 11 உறுப்பினர்கொண்ட தற்காலிகச் செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது :—

செயற் குழு உறுப்பினர்கள் :— சென்னை : என். வி. நடராசன் ; கோவை : கஸ்தூரி, பி.ஏ.,பி.எல்., இரா. சுந்தரம் ; ஒண்டிப்புதூர் : பி. அய்யாச்சாமி ; திருப்பூர் : துரைசாமி ; உடுமலை : ப. நாராயணன் ; பொள்ளாச்சி : அ. சுப்பையா ; கரூர் : பெ. வீரண்ணன் ; சிங்காநல்லூர் : எஸ். பி. இராசு ; மாச்சம்பாளையம் : கா. கிருஷ்ணன் ; கோவை : மாரிமுத்து.

பின்னர், தோழர் இரா. சுந்தரம் அவர்களைக் 'கன்வீனர்'ராகவும், தோழர்கள் என். வி. நடராசன், கஸ்தூரி பி.ஏ.,பி.எல். ஆகியோரை ஆலோசனையாளர்களாகவும் நியமிப்பதென முடிவு செய்யப்பட்டது.

வரவேற்பு

அன்று காலை 7-மணியளவில், கோவை இரயில் நிலயத்தில் தோழர் என்.வி.நடராசன், மற்றும் தோழர்களுக்கும் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் சார்பில் வரவேற்பு தரப்பட்டது.

ஊழியர் கூட்டம்

அன்று மாலை 5-மணி சுமாருக்கு கோவை, சிங்காநல்லூர், சூலூர், ஒண்டிப்புதூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த ஊழியர் கூட்டம் நடைபெற்றபோது, தோழர் என்.வி.நடராசன் 'ஊழியர் கடமை' குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

பொதுக் கூட்டம்

அன்று மாலை 6-மணிக்கு என். ஜி. ஆர் மைதானத்தில் தோழர் செ. இராசு தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் அர்த்தனாரி, துரைசாமி, வெங்கிடுசாமி, இரா. சுந்தரம், எஸ். ஏ. இராசமாணிக்கம், கஸ்தூரி ஆகியோர் சொற்பொழிவாற்றியதும், தோழர் என். வி. நடராசன் 'தொழிற்சங்கத் துறையில் திராவிட இயக்கம் ஈடுபடுவதேன்?' என்பது குறித்து நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்.

கோரிப்பாளையம் இளைஞர் பகுத்தறிவு மன்றம்

3—4—55 காலை 11-15 மணிக்கு, தோழர் இ. பி. சி. யாகூப் தலைமையில் நடைபெற்ற மன்ற உறுப்பினர் கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : நா. மைதீன் பிச்சை ; துணைச் செயலாளர் : கி. பெருமாள் ; பொருளாளர் : என். இப்ராஹிம்சா ; செயற்குழு உறுப்பினர்கள் : இ. பி. சி. யாகூப், கே. துரைராஜ், கே. கணபதி, பொ. ராமச்சந்திரன்.

திருமணம்

6—4—55 காலை 8 மணிக்கு திருவல்லிக்கேணி தி. மு. கழகத் தோழர் நீல. நாராயணன் தலைமையில், தோழர் இராகவன்—தோழியர் நவநீதம் அம்மையார் திருமணம் நடைபெற்றது. தோழர் இளம்பரிதி, மணமக்களைப் பாராட்டிப் பேசினார். இத்திருமண நினைவாக 2-வது வட்டக் கிளைக்கு ரூ. 3-ம், 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ.1-ம் நன்கொடையளிக்கப்பட்டது. 'நம் நாடு'க்கு அளித்த அன்பளிப்புத் தொகை பெற்றுக்கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்.

கழகக் கூட்டங்கள்

★

மதுரை

விக்டோரியா எட்வர்ட் ஹாலில்
10—4—55 காலை 10 மணிக்கு
(சிறப்புச் சொற்பொழிவு)
பேசுபவர் :
இரா. நெடுஞ்செழியன்

* * *

மாலை 6 மணிக்கு
திலகர் திடலில்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
எஸ். முத்து

★

பாபநாசம்

10—4—55 மாலை
பேசுவோர்:
க. அன்பழகன்
க. அறிவழகன்

★

மாயூரம்

நகரப் பூங்காவில்
10—4—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: என். கிட்டப்பா
பேசுவோர்:
சத்தியவாணிமுத்து
கே. கே. நீலமேகம்
என். எஸ். இளங்கோ
ப. நாராயணசாமி

★

சாத்தான்குளம்

காந்தி மைதானத்தில்
11—4—55 திங்கள் மாலை
பேசுபவர்:
ஈ. வெ. கி. சம்பத்

★

ஐயம்பேட்டை

11—4—55 திங்கள் மாலை
பேசுவோர் :
க. அன்பழகன்
க. அறிவழகன்

★

முத்துப்பேட்டை

ஏ. எஸ். என். திடலில்
11—4—55 மாலை 5½ மணிக்கு
பேசுவோர்:
கி மனோகரன்
என். எஸ். இளங்கோ
ஆ. மீ. அலிசேக் மன்சூர்

★

முரம்பநாடு

வ. உ. சி. திடலில்
12—4—55 இரவு 7½ மணிக்கு
தலைவர்: எஸ். அரியமுத்து
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
சு. கந்தசாமி

பொதுக்கூட்டங்கள்

10—4—55 மாலை 6 மணிக்கு, சென்னை, லிங்கிச் செட்டி தெரு, மல்லிகேஸ்வரர் கோயில் அருகில், மஜீத் மன்ற முதலாண்டு விழாவும், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நூற்றுண்டு விழாவும், தோழர் செல்வராஜ் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், வெ. கி. பார்த்தசாரதி ஆகியோர் பேசுவர்.

* * *

10—4—55 அன்று மாலை, சித்தூரில், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நூற்றுண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் அ சுபந்தரசு, ஆ. மணி எழிலன் ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

10—4—55 காலை 9 மணிக்கு, சென்னை, முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலைவினாயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றத்தில், தோழர் என். இராமதாஸ் தலைமையில், 'அழகிரி நினைவு நாள்' என்னும் பொருள் பற்றி மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

குறள் வகுப்பு

10—4—55 காலை 9 மணிக்கு, திருச்சி, எண் 1, பெரிய செட்டி தெரு, பாண்டியன் படிப்பகத்தில், திரு. கி. ரா. தருமராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

திருமணங்கள்

★

11—4—55 காலை 9 மணிக்கு, சின்ன காஞ்சீபுரம், வரகுவாசல் தெரு, 46-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் டி. மாணிக்கம்—தோழியர் வனஜாட்சி திருமணம், பொதுச்செயலாளர் அண்ணாதுரை தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஈழத்து அடிகள், காஞ்சி கல்யாணசுந்தரம், கே. ஏ. மதியழகன், கண்ணதாசன், சி. வி. இராசகோபால், சி. வி. எம். அண்ணாமலை, இராம. அரங்கண்ணல், கே. டி. எஸ். மணி, வெ. சம்பந்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

11—4—55 காலை 9 மணிக்கு, காஞ்சீபுரம், இராச வீதி, 33-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் இராமச்சந்திரன் தோழியர் ஜானகி திருமணம், தோழர் அ. பொன்னம்பலனர் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, எம். ஆர். பூபதி ஆகியோர் பேசுவர்.

* * *

11—4—55 காலை 9 மணியளவில், காஞ்சிபுரம், ஆடிசன் பேட்டை, ஜவுளிக் கடை சத்திரத்தில், தோழர் அர்த்தநாரி—தோழியர் பூங்காவனம் திருமணம், தோழர் ஈழத்து அடிகள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இராம. அரங்கண்ணல், சி. வி. எம். அண்ணாமலை, வெ. சம்பந்தன், டி. சபாபதி ஆகியோர் பேசுவர்.

* * *

11—4—55 அன்று காலை, அய்யம்பேட்டையில், தோழர் க இராமசாமி—தோழியர் யோகாம்பாள் திருமணம், தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெறும்.

* * *

11—4—55 காலை 9 மணிக்கு, முத்துப்பேட்டை, திருத்துறைப் பூண்டி ரோடு, மணமகன் இல்லத்தில், தோழர் ரெங்கையன்—தோழியர் பாப்பா திருமணம், தோழர் ஆ. மீ. அலிசேக் மன்சூர் தலைமையில் நடைபெறும்.

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

★

ஏப். 10: மதுரை—காலை 10 மணி: சிறப்புக்கூட்டம்; மாலை 3 மணி: மாவட்டக் கிளைத் தேர்தல்; மாலை 6 மணி: பொதுக்கூட்டம்
11: ஆறுமுகநேரி
12: முரப்பநாடு
13: கண்ணன்புதூர் (மாலை 4 மணி)
இரவிபுதூர் (இரவு 7 மணி)
14: குளச்சல் (மாலை 4 மணி)
இரணியல் (இரவு 7 மணி)
15: ஈத்தாமொழி (மாலை 4 மணி)
நாகர்கோயில் (இரவு 7 மணி)
16: பயணம்
17: சேலம்
18: சென்னை

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

★

ஏப். 10: பாபநாசம் (தி.மு கழக பொதுக்கூட்டம்)
11: காலை 7 மணிக்கு—வக்காரம்பேட்டை (திருமணம்)
காலை 10 மணிக்கு—ஐயம்பேட்டை (திருமணம்)
மாலை—ஐயம்பேட்டை (தி மு. கழக பொதுக் கூட்டம்)
14: சைதாப்பேட்டை (ஒப் எம். சி. ஏ. கல்லூரி)
16, 17: சேலம் (திருவள்ளுவர் நினைவு நாள் மாநாடு)

பாரிஸ் ஒப்பந்தங்கள்

பெல்ஜியம், லக்சம்பர்க் அங்கீகாரம்

மேற்கு ஜெர்மனியை ஆயுத பாணியாக்கும் பாரிஸ் உடன்படிக்கைகளை பெல்ஜியம், லக்சம்பர்க் ஆகிய நாடுகளின் மக்கள் சபைகள் அங்கீகரித்துவிட்டன என்று தெரியவருகிறது.

இன்னும் இந்த உடன்படிக்கைகளை அங்கீகரிக்கவேண்டியது டச்சு, ஹாலந்து ஆகிய இருநாடுகள் மட்டும்தான் என்று கூறப்படுகிறது.

ஐந்தாண்டு திட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. இத்தாலி நாட்டு நிபுணரும், அமெரிக்க நாட்டு நகர அமைப்பு விற்பன்னர்களும், மேற்படி நகர அமைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கட்ச் வட்டாரத்தின் தலைநகராக உள்ள பாவுஜ் நகருடன் புதிய 'காந்தி தாமை' இணைத்துக் கொண்டிருந்த 35-கல் நீளமுள்ள இருப்புப் பாதை, ரூ. 50 லட்சம் செலவில் அகலப்படுத்தப்பட்டிருக்கிறது.

ரூ. 6½ லட்சம் செலவில் 'காந்தி தாம்' புகைவண்டி நிலையத் திற்குப் புதிய கட்டிடம் எழுப்பப்பட்டிருக்கிறது. அக் கட்டிடம், பூகம்பத்தையும் எதிர்த்து நிற்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

ஆண்டு ஒன்றுக்கு அத் துறைமுகத்தில் சுமார் 8 லட்சம் டன் பொருட்கள் இறக்குமதியும், 1½ லட்சம் டன் ஏற்றுமதியும் நடைபெறக்கூடும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அத் துறைமுகத்தால், உள்நாட்டில் 2¼ லட்சம் சதுர மைல் நிலப்பரப்பிற்கும், அதில் வசிக்கும் 450 லட்சம் மக்களுக்கும் நலம் ஏற்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்குறிப்பிட்ட நிலப் பகுதிக்கும் பம்பாய் துறைமுகத்திற்கும் உள்ள தொலைவு 200 கல் ஆகும். புதிய கண்ட்லா துறைமுக நிர்மாணத்தின் விளைவாக, தரை வழியாக பம்பாயிக்கும், பம்பாயிலிருந்து பொருட்களைக் கொண்டு வருவதிலும் — செல்லுவதிலும் செலவழிக்கப்பட்டு வரும் ரூ. 90 லட்சம் போக்குவரத்துச் செலவு மீதமாகும் எனவும் சொல்லப்படுகிறது.

இப்புதிய துறைமுகத்தினால் வட குஜராத், இராஜஸ்தான், ஆஜ்மீர், டெல்லி, கிழக்கு பஞ்சாப், மேற்கு உத்தரபிரதேசம் ஆகிய பகுதிகள் உடனடியாக நலன்கள் பலபெற இருக்கின்றன.

'காந்திதாம்' நவீன நகரத்தில் சிந்தி அகதிகள் லட்சக்கணக்கில் குடியேற்றப்படுவர்—ஏற்கனவே குடியேறியும் உள்ளனர்! அவர்களின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம் !

ஆட்குறைப்புக்கு எதிர்ப்பு: வேலை நிறுத்தம் முடிவு

விசாகை, ஏப். 6—

கடந்த 4 நாட்களாகத் துறைமுகத் தொழிலாளர்கள் செய்து வந்த வேலை நிறுத்தம் நேற்று காலையுடன் முடிவடைந்துவிட்டதாகத் தெரிகிறது.

தற்காலிகத் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவதை மீண்டும் 3 மாத காலத்திற்கு ஒத்திப் போடுவதென்று துறைமுக அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாகவும், அம்முடிவின் பின்னரே இந்த வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டுள்ளதெனவும் கூறப்படுகிறது.

உயர் நீதிமன்ற நீதிபதி பதவியை ஒறுத்த வழக்கறிஞர்கள்

உ. பி. முதன் மந்திரி தரும் தகவல்

காசி, ஏப். 6—

அலகாபாத் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்களில் சிலர், நீதிபதிகளாகும்படி கேட்கப்பட்டபோது மறுத்துவிட்டனர் என்ற தகவலை பிரதேச முதன் மந்திரி டாக்டர் சம்பூர்ணனந்த் வெளியிட்டிருக்கிறார்.

வழக்கறிஞர் சங்கம் தனக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் அவர், மேலும் கூறியதாவது :—

"பிரபல வழக்கறிஞர்கள், உயர் நீதிமன்ற நீதிபதிகளாகும்போது, தங்களின் விரிவான தொழிலை இழக்க வேண்டியவர்களாகின்றனர் என்பது உண்மையே; ஆனால், பொதுப் பணி, சிலரின் தியாகங்களால்தான் நடக்க முடியும்; மக்களின் நன்மைக்காக 'தியாகம்' செய்வதற்கு, மக்களின் உரிமைகளுக்குக் காப்பாளர்களாயிருக்கிற வழக்கறிஞர்கள் வெகுவாக முன் வராதது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது."

கால்நடை தொத்து நோய் தடுப்பு

இராணிப்பேட்டையில் மருந்துவ உற்பத்தி நிலையம்

கால்நடைகளின் தொத்து நோய்களைத் தடுப்பதற்காக உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த 'அம்மைப் பால்' மருந்து வகைகளைத் தயாரிக்கும் திட்டம் ஒன்றை, இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்கள் தடுப்பு மருந்துகள் உற்பத்தி நிலையத்தில் ஏற்படுத்துவதற்கு இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழக நிலையம் அனுமதி தந்துள்ளதாகத் தெரிகிறது. கால்நடைகளுக்கு வரும் பல நோய்களிலிருந்தும் அவற்றை ஒரே காலத்தில் காப்பாற்றக் கூடிய கூட்டுத்தடை மருந்துகளை உற்பத்தி செய்யவும், தற்போது வழக்கமாகத் தயாரிக்கப்பட்டு வரும் மருந்துகளின் பாதுகாக்கும் சக்தி அபிவிருத்தியடையச் செய்யவும் அவற்றின் 'தரத்'தைப் பாதுகாக்கவும் இத்திட்டம் வழிவகைகள் செய்து கொடுக்கும் என்று கூறப்படுகிறது.

இத்திட்ட வேலைகளுக்கென விசேட சிப்பந்திகளும் நியமிக்கப்பட இருக்கின்றனராம்.

மந்திரி சபை மீது

நம்பிக்கையில்லாத் தீர்மானம்

பீகார் மாநில அமைச்சரவை மீது, சட்டசபை எதிர்க் கட்சித் தலைவர் நம்பிக்கையின்மைத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறாராம். அத்தீர்மானத்தை சபாநாயகர் நிராகரித்துள்ளதாகத் தெரிகிறது. வருகிற 13-ந் தேதியன்று இதுபற்றிய விவாதம் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

தண்டிக்கப்பட்டவனிடம் சக - திருடன் கைவரிசை !

திருட்டுக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட ஒரு திருடன், உடனிருந்த மற்றொரு திருடனிடமே தனது கைவரிசையைக் காட்டிய நிகழ்ச்சி ஒன்று அகமதாபாத்தில் நடைபெற்றிருக்கிறது.

அகமதாபாத்தில், போலீசாரால் கைது செய்யப்பட்டு, திருட்டுக் குற்றத்திற்குத் தண்டனை விதிக்கப் பெற்ற போலீஸ் காரில் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட சில கைதிகளில், அத்திருடனும் ஒருவனும்; தன் உடனிருந்த மற்றொரு கைதியின் சட்டைப் பையில் பணம் குலுங்கும் சத்தம் கேட்டதும் அதனைத் திருட எத்தனிக்கையில் போலீசார் அதனைக் கண்டுபிடித்துவிட்டனராம். பிற கைதியினரின் ஆவேசத் தாக்குதலிலிருந்து அவனைக் காப்பாற்ற அவர்களிடமிருந்து போலீசார் அப்புறப்படுத்திவிட்டனராம்.

அத்திருடன் மீது, மீண்டும் புதியதொரு திருட்டுக் குற்ற வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதாம் !

1954-ம் ஆண்டில், இந்தியாவில் தயாரான கைக்குத்தல் அரிசியின் மொத்த அளவு சுமார் 1,47,64,000 டன் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; 1953-ம் ஆண்டில் உற்பத்தியானது 1,29,14,000 டன்.

நந்திகொண்டா திட்டம்

டில்லியின் நிபந்தனைகளுக்கு ஆந்திரா தலைவணக்கம்

சுமார் 122 கோடி ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டிருக்கும் நந்திகொண்டா திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதென ஏப்ரல் 15-ந் தேதியன்று கூடவிருக்கும் ஆந்திர மாநில மந்திரி சபையில் முடிவு செய்யப்படும் என்று தெரிய வருகிறது.

இதனை, உதவி முதன் மந்திரி என். சஞ்சீவிரெட்டி, பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

இந்த ஒப்புதலை ஏற்கனவே ஆந்திர கவர்னர் தெரிவித்துவிட்டதாகவும், பிரதேசக் காங்கிரஸ் கட்சிகூட திட்டத்திற்கான நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதாகவும் சஞ்சீவி ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

கோய்ராலாவுக்குக் கல்தா?

தேசிய ஜனநாயகக் கட்சித் தலைமையும் பறிமுதல்

காட்மண்டு, ஏப். 7—

தேசிய ஜனநாயகக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து நேபாளத்தின் முன்னாள் பிரதம மந்திரியான எம். பி. கொய்ராலாவை விலக்கிவிட வேண்டும் என்று கட்சி முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

கட்சித் தலைமைக்குத் தகுதியற்றவர் என்று அவர் மீது கட்சியினர் குற்றஞ்சுமத்தி, இனி அவர் தங்கள் தலைவரல்லர் என்று கூறிவிட்டனராம்.

புதுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக கட்சியினர் பொது உறுப்பினர் கூட்டம் கூட்டவும் முடிவு செய்திருக்கின்றனராம்.

இந்த கொய்ராலா, தங்களுக்குத்தான் கட்சி அங்கத்தினர்களின் ஆதரவு இருக்கிறது என்று கூறிக்கொண்டிருக்கின்றனராம்.

கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள்

லிபியா எதிர்ப்பு

அரேபிய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கேட்கப்படுகிற இராணுவ உதவிகளை லிபியா ஏற்றுக்கொள்ளும் நிலைமையில் இல்லை என்று பிரதம மந்திரி முன்தாபா பென்ஹலிம் குறிப்பிட்டிருக்கிறார்.

அதேபோலவே, துருக்கி — ஈராக் ஒப்பந்தத்தில் சேருவதற்கான காரணங்கள் எதுவுமில்லையென்றும் லிபியா கருத்தறிவித்துள்ளதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம், ஏ.